# பெண்கள் மற்றும் இழப்பீடுகள்
## தொடர்பான சுருக்கவுரைப் பத்திரம்



Centre for Equality and Justice

# மின்னஞ்சல் ஊடாக சர்வதேச நிபுணர்கள் மத்தியில் பகிர்வதற்கான பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான சுருக்கம்

**மார்ச் 2022**

*இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகளின் நிலை குறித்து சர்வதேச நிபுணர்களுக்கு தகவலறிவிப்பதற்கான நோக்கத்தைக் கொண்ட சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் (CEJ) ஆய்வு ஆவணங்களைப் பயன்படுத்திய CEJ இன் சுருக்கமான ஆக்கமாகும்.*

## இலங்கையின் நிலைமாறுகால நீதி உறுதிமொழிகள்

2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ஆம் திகதி ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 30வது அமர்வின் பொது விவாதத்தில், இலங்கையின் அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர அவர்கள் நிலைமாறுகால நீதிக்கான பொறியமைப்புக்களை அறிமுகம் செய்யும் உரையில்[1], "நல்லிணக்க நடைமுறையானது உண்மையைத் தேடுதல், நீதி, இழப்பீடுகள், மீண்டும் அநீதி நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல் ஆகிய பரந்த துறைகளுக்குக் கவனம் செலுத்துவதைச் சம்பந்தப்படுத்துகின்றதுடன் இவை மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல் உண்மையில் அர்த்தமுடையதாகவிருக்க வேண்டுமேயானால் தமிழ் மக்களின் மனக்குறைகளை நிவர்த்தி செய்கின்ற அரசியல் தீர்வொன்றை அடைய வேண்டிய தேவை உள்ளது என்பதை இலங்கை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக் கொள்ளுகின்றது" எனத் தெரிவித்தார்.[2]

அதனடிப்படையில், இழப்பீடுகளுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் தொடர்பில், "முன்மொழிவு செய்யப்பட்ட உண்மை, நீதி, நல்லிணக்கம், மீள நிகழாமை மீதான ஆணைக்குழுவினாலும் காணாமற் போனோர்கள் பற்றிய அலுவலகத்தினாலும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினாலும் பிற எந்த நிறுவனத்தினாலும் இழப்பீடுகள் தொடர்பிலான சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதன் பொருட்டு நியதிச் சட்டத்தினால் ஈடுசெய்தல்களுக்கான அலுவலகமொன்று நிறுவப்படும்"[3] என அவர் உறுதியளித்தார். உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான உரிமை சார்ந்த நிலுவையில் உள்ள பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நான்கு பிரதான பொறியமைப்புக்களில் ஒன்றாக இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OfR) உள்ளது. உண்மை, நீதி நல்லிணக்கம் மற்றும் மீளநிகழாமைக்கான ஆணைக்குழு, காணாமற் போனோர்கள் தொடர்பான அலுவலகம், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள், மற்றும் சர்வதேச மனிதநேய சட்டத்தின் மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான விசேட விசாரணையுடனான நீதிசார் பொறியமைப்பு என்பன அடையாளங் காணப்பட்ட ஏனைய பொறியமைப்புக்களாகும்.[4]

## தேசியமட்ட கலந்தாலோசனைகள்

மேலும், "செயற்பாடுகளின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும்," இலங்கை அரசாங்கமானது, "பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களில் இருந்தும், அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூகத்தை உள்ளடக்கிய பரந்த தேசிய கலந்தாய்வுகளில் ஈடுபடல், சர்வதேச நிபுணத்துவம், உதவி மற்றும் சிறந்த பயிற்சிகளில் இருந்த இந்தச் செயற்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு அது தகவலறிவிக்கும்" என உறுதியளித்தது[5]. இந்த உறுதிமொழிக்கு அமைய நல்லிணக்க பொறியமைப்புகளுக்கான கலந்தாய்வுச் செயலணி (CTF) ஒன்றினை அப்போதைய பிரதமர் நியமித்தார். 2017 ஜனவரியில், CTFஇன் அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. இழப்பீடுகளுக்கான அலுவலகம் எவ்வாறு அமைக்கப்படும் என்பதற்கான பிரதான ஆவணமாக செயற்படும் நோக்கத்துடன் உத்தேச இழப்பீடுகளுக்கான கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளைக் கொண்ட முழுமையான அத்தியாயம் ஒன்றினை அது உள்ளடக்கியிருந்தது.

[1] https://www.colombotelegraph.com/index.php/sri-lankas-response-to-unhrc-the-full-text-of-foreign-affairs-ministers-speech-today/
[2] UNHRC தீர்மானம் 30/1
[3] UNHRC தீர்மானம் 30/1
[4] UNHRC தீர்மானம் 30/1
[5] UNHRC தீர்மானம் 30/1

# இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினை உருவாக்குவதற்கான சட்டவாக்கம்

இலங்கை அரச தரப்பாக இருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) உள்ளடங்கலாக, சர்வதேச சட்டத்திற்கு அமைய மனித உரிமைகள் மீறல்களுக்கு அடிகோலிய தமது செயற்பாடுகள் அல்லது விலக்கல்களின் விளைவுகளை அடையாளப்படுத்துவதற்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான சட்டப் பொறுப்பினை இலங்கை கொண்டுள்ளது. யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரிய குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளுக்கான உரிமை என்பது உடன்படிக்கைகள் மற்றும் வழக்காற்றுச் சர்வதேச சட்டத்தில் முழுமையாக அல்லது அண்மித்ததாக விளக்கப்பட்டுள்ளதாக பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.[6]

இந்தக் கடமைகளுடன் சம்பந்தப்பட்டதாக, 2018 நடுப்பகுதியில் அமைச்சரவையானது இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டமூலத்தை அங்கீகரித்து, வர்த்தமானியை வெளியிட்டது. எவ்வாறாயினும், பரந்தளவிலான பொதுக் கலந்தாய்வுகளின் அடிப்படையில் CTFஇனால் முன்வைக்கப்பட்ட பல பரிந்துரைகளின் அடிப்படையில் அலுவலகம் அமைக்கப்படுவதில் சட்டமூலம் தவறியது. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை அமைப்பதில், உத்தேச சட்டத்தில் இரண்டு விடயங்களை சிவில் சமூகம் அடையாளங் கண்டது:

- **a** இழப்பீடுகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் குறித்த தீர்மானம் எடுத்தல் அதிகாரம் அலுவலகத்திடம் இருக்கவில்லை. உண்மையில், உத்தேச அலுவலகத்தினால் உருவாக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியின் பேரில் மாத்திரம் உள்வாங்கப்படும் (பிரிவு 11(1)(எ)).[7]
- **b** அமைச்சரவை அமைச்சர்களினால் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் அனுமதிக்கப்படுவதுடன், நிதி வழங்கல் தொடர்பான அனுமதியைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (பிரிவு 22(4)). தமது ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியினை உத்தேச அலுவலகம் கொண்டுள்ளது என்பதன் அடிப்படையில், இந்தத் தேவையற்ற நடைமுறைசார் தேவைப்பாடு என்பது பாராளுமன்ற மேற்பார்வைக்கான தேவையற்ற மேலதிக அடுக்கினை மாத்திரம் சேர்ப்பதுடன், இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் தொடர்பான அலுவலகத்தின் தன்னாட்சியை நீர்த்துப் போகச்செய்கிறது.[8]

சர்வதேச தரங்களுக்கு அமைவாக உத்தேச சட்டத்தினை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை[9] சிவில் சமூக அமைப்புகள் முன்வைத்தன. உதாரணமாக, “பாதிக்கப்பட்ட நபர்” என்பதற்கான வரைவிலக்கணத்தைத் திருத்துதல், மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குள் சுயாதீனமான மற்றும் வினைத்திறன் மிக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான பொறியமைப்பு ஒன்றினை வழங்குவதற்கு பொறியமைப்புக்களை உருவாக்கல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும், உத்தேச சட்டத்தில் குறிப்பிடத்தக்க சாதகமான விடயங்கள் இருந்தன:

1. தேவையை அங்கீகரித்தல்
   - **a** பொதுக் கல்வி, நினைவுகூரல் தொடர்பான, சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விசேட கொள்கைகள்[10]
   - **b** பால்நிலை உள்ளடங்கலாக இலங்கை சமூகத்தின் பன்மைத்துவத்தினை பிரதிபலிக்கும் அலுவலக உள்ளடக்கத்தினை உறுதி செய்தல்[11]

[6] மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், மோதலுக்குப் பின்னரான நாடுகளுக்கான சட்ட ஒழுங்கு கருவிகள், இழப்பீட்டு நிகழ்ச்சிகள், 2008 https://www.ictj.org/sites/default/files/UNHCHR-Global-Reparations-Programmes-2008-English.pdf

[7] https://www.cpalanka.org/civil-society-raises-concerns-with-the-office-for-reparations-bill/

[8] https://www.cpalanka.org/civil-society-raises-concerns-with-the-office-for-reparations-bill/

[9] https://www.amnesty.org/en/documents/asa37/9219/2018/en/

[10] சட்டத்தின் பிரிவு 2(ஆ)

[11] சட்டத்தின் பிரிவு 4(4)(அ)

2 தமது கடமைகளை செய்யும் போதும், முன்னெடுக்கும் போது பின்பற்றுவதற்கும்[12] மற்றும் இந்த நோக்கத்திற்கான விசேட பயிற்சிகளை வழங்குவதற்கும், அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கான பால்நிலை மற்றும் சிறுவர்களுக்குப் பொறுப்பான கொள்கைகளை உள்ளடக்குவதற்கும் விதிகளை உருவாக்குவதற்கும், வழிகாட்டிகளை வழங்குவதற்குமான அதிகாரங்கள் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டிக்கின்றன.[13]

3 கொள்கைகளை உருவாக்கும் போதும், வழிகாட்டிகளை வழங்கும் போதும், இழப்பீடுகளுக்கான அலுவலகமானது,

a பால்நிலை பொறுப்பு, பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளான பாதிக்கப்பட்ட நபர்களின் விசேட தேவைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட நிபுணத்துவத்துடனான ஆலோசகர்களை உறுதி செய்வதற்கு கடமைப்பட்டுள்ளது[14]

b பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் விசேட தேவைகள் குறித்து அக்கறையுடன், பாரபட்சமின்மை, பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய மற்றும் நியாயத்துடனான கோட்பாடுகளால் வழிநடத்தப்படுதல்[15]

c பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலாக இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நபர்களுக்கான விசேட ஏற்பாடுகளை வழங்குவதற்கான தேவைக்கு உரிய கவனம் செலுத்தல்.[16]

## செயற்பாட்டில் இழப்பீடுகளுக்கான அலுவலகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சட்டத்திற்கு[17] அமைய இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் உருவாக்கப்பட்ட இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளுக்கு அமைய, மாவட்ட அல்லது பிரதேச செயலகங்களின் உதவியுடன் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பொதுக் கலந்தாய்வுகளை இழப்பீடுகளுக்கான அலுவலகம் முன்னெடுத்தது. இந்த பொதுக் கலந்தாய்வுகளில் கலந்துகொள்வதற்கு அழைக்கப்பட்ட பாதிக்கப்பட்ட நபர்களின் பிரிவுகளில் பின்வருவோர் உள்ளடங்கியிருந்தனர்:

+ காணாமல் போனோரின் தாய்மார் மற்றும் மனைவியர் - பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளடங்கலாக
+ மோதல், சிவில் குழப்பநிலை அல்லது அரசியல் அமைதியின்மையினால் கணவரை இழந்த பெண்கள்
+ உள்நாட்டில் இடம்பெயர்ந்த மற்றும்/ அல்லது மீள்குடியேற்றப்பட்ட நபர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள்
+ மோதல், சிவில் குழப்பங்கள் அல்லது அரசியல் அமைதியின்மையினால் காயமடைந்தவர்கள்
+ மோதல், சிவில் குழப்பங்கள் அல்லது அரசியல் அமைதியின்மையினால் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள்
+ அரச இராணுவப் படை மற்றும் பொலிஸின் ஓய்வு பெற்ற அல்லது மாற்றுத்திறனாளி உறுப்பினர்கள், மற்றும் அவர்களது குடும்பங்கள்
+ அரச இராணுவப் படை மற்றும் பொலிஸின் உயிரிழந்த அல்லது காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்கள்

[12] சட்டத்தின் பிரிவு 11(1)(ஊ)
[13] சட்டத்தின் பிரிவு 11(1)(ஐ)
[14] சட்டத்தின் பிரிவு 12(1)(ஆ)
[15] சட்டத்தின் பிரிவு 12(1)(இ)
[16] சட்டத்தின் பிரிவு 12(1)(ஈ)(iii)
[17] இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் 2021, 2018ஆம் ஆண்டு 34ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் பிரிவு 11(1)(எ)இற்கு அமைவாக பிரிவு 2(அ)இற்கு இசைந்ததாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தால் உருவாக்கப்பட்டு, அமைச்சரவை அமைச்சர்களால் அனுமதியளிக்கப்பட்டது. (இந்த ஆவணம் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை). CEJஇற்கு நகலுக்கான தனிப்பட்ட அணுகல் இருந்தது.

- புனர்வாழ்வளிக்கப்பட்ட மற்றும் சமூகத்தில் மீளிணைக்கப்பட்ட முன்னாள் எல்.ரி.ரி.ஈ போராளிகள்
- இந்தியாவில் இருந்து திரும்பிய இடம்பெயர்ந்து சென்றோர்
- மோதல், சிவில் குழப்பங்கள் அல்லது அரசியல் அமைதியின்மையினால் மனரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அதன் விளைவுகள்,
- மோதல், சிவில் குழப்பங்கள் அல்லது அரசியல் அமைதியின்மையினால் உடைமைகளை இழந்த நபர்கள் (அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்)

2019 டிசம்பரில் நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட நபர்களை பிரநிதித்துவம் செய்யும் 13 சிவில் சமூக அமைப்புகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்தாய்வுகளை தமது இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் ஆவணத்தில் இழப்பீடுகளுக்கான அலுவலகம் சுட்டிக்காட்டியிருந்தது. மேலும், தமது கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளை உருவாக்குவதற்கு, பாதிக்கப்பட்ட நபர்களின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் தொடர்பில் உள்ளடக்கத்தைப் பெறுவதற்கு CTFஇன் உறுப்பினர்களை சந்தித்தது. CTFஇன் இறுதி அறிக்கை மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கையை ஆராய்ந்ததாகவும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் குறிப்பிடுகின்றது.

## பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அவர்கள் திருப்தி அடையக்கூடிய வகையில் வழங்குவதற்கான பெண்களை விசேடப்படுத்திய கலந்தாய்வுகளுக்கான தேவை

காணாமல் போனோரை தேடும் முயற்சி, உடைந்த குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களை வலுப்படுத்துவதற்கும் மீளக்கட்டியெழுப்புவதற்குமான முயற்சிகள், நீதியை நாடல் உள்ளடங்கலாக இலங்கையில் மோதல் மற்றும் அதன் பின்னரான காலப்பகுதியில் பெண்கள் முக்கியமான பங்கினை வகித்தனர். மோதலின் போது பெரும்பாலான ஆண் குடும்பத் தலைவர்கள் காணாமல் போனார்கள் அல்லது கொல்லப்பட்டனர் என்பதனால், குடும்பத்தின் ஏகத் தலைவர்களாகவும், பராமரிப்பவர்களாகவும் அங்கம் வகித்ததுடன், மோதல் காலத்தின் போதான மோசமான மனித உரிமைகள் மீறல்களுக்கான உண்மை மற்றும் நீதியை நாடுவதிலும் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.[18] எவ்வாறாயினும், கடந்த காலத்து இழப்பீட்டு நிகழ்ச்சிகள் பெண்களின் விசேடத் தேவைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியத் தன்மைகளை கவனத்தில் கொண்டதாக வடிவமைக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, பால்நிலைசார் பார்வை அதில் இல்லை. இழப்பீடுகளுக்கான அணுகும் வசதி, அல்லது காணாமல் போன அன்புக்குரியவர்களை தேவைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை சுரண்டலுக்குள்ளாக்கப்படுகின்றனர். சிலர் பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியல் வன்முறை என்பவற்றை எதிர்கொள்கின்றனர்.

எந்தவொரு இழப்பீட்டுத் திட்டத்திலும் பெண்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன:[19]

- வாழ்க்கையை மற்றும் வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கும், தமது கண்ணியத்தை மீளுறுதிசெய்வதற்கும் மிகவும் அவசியமான உதவியை இழப்பீடுகள் பெண்களுக்கு வழங்குகின்றன.

[18] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ
[19] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ

- ஆண்களைப் போன்ற அதே மீறல்களை பெண்கள் எதிர்கொண்டாலும், அவர்களது ஏற்கனவே உள்ள சமூகப் பொருளாதார மற்றும் சட்ட அந்தஸ்து அவர்கள் மீதான விளைவுகள் வேறுபடுவதற்கு காரணமாகின்றன.

- மோதல் நிலைமைகளின் போதும் அல்லது அதற்குப் பின்னரும் தமது குடும்பங்களைப் பராமரிப்பதற்கு ஏகப் பொறுப்பினை எடுப்பதற்கு பெண்கள் தள்ளப்படுகின்றனர்.

- கணவரை இழந்தப் பெண்கள் உள்ளடங்கலாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தமது சமூகங்களில் ஒதுக்கி வைக்கப்படலாம் என்பதுடன், தமது குடும்பங்களால் கைவிடப்படலாம்.

- ஆண்களுடன் ஒப்பிடும் போது பொருளாதார செயற்பாடுகளுக்கான மிகச்சில சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளதால் வன்முறையால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த பெண்கள் குறைந்த வாய்ப்புக்களுடன் ஆதரவற்றவர்களாக உள்ளனர்.

இதற்கு மத்தியில், தமது கொள்கை ஆவணத்தில் விளக்கப்பட்டவாறு, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த சில பெண் குழுக்கள் தவிர்த்து, இழப்பீடுகள் மற்றும் குணமாதலின், திருத்தியமைத்தலின் மற்றும் பெண்களின் சமூக-பொருளாதார, சிவில் மற்றும் அரசியல் அந்தஸ்தினை மறுசீரமைப்பு செய்யும் பால்நிலை பரிணாமங்களை அர்த்தமுள்ள வகையில் உள்வாங்குவதற்கு பரந்தளவிலான பெண்களை இலக்கு வைத்த கலந்தாய்வுகளை அலுவலகம் முன்னெடுக்கவில்லை என்பதனை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கலந்தாய்வுகளின் வகைகளின் பட்டியல் காட்டுகின்றது. உதாரணமாக, முரண்பாடுசார் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டப் பெண்களை இழப்பீடுகளுக்கான அலுவலகம் கலந்தாலோசிக்கவில்லை. பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டவர்களுடன் பொதுக் கலந்தாய்வுகளின் வழியாக பெண்கள் தமது கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை சுதந்திரமாக பகிரக்கூடிய, சந்தர்ப்பத்தை வழங்க முடியாது. தனிநபர் அல்லது இலக்குக் குழு கலந்துரையாடல்கள் நோக்கத்தினை அத்தகைய உரையாடல்கள் கொண்டிருப்பது அதற்கான காரணமாகும். குறைந்தளவிலான அறிக்கையிடல் மற்றும் உதாரணமாக, மோதல்-சார் பாலியல் வன்முறையின் இருப்பு போன்றன காரணமாக பெண்கள்-சார் கலந்தாய்வுகள் அவசியமாகும். பால்நிலைசார் வன்முறையினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களினால் பல்வேறுபட்ட வகையிலான இழப்பீடுகள் கோரப்படுகின்றன. உதாரணமாக, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுடன் முன்னெடுக்கப்பட்ட நேர்காணல்கள் தொடர்பான ஆய்வு முடிவுகளின் அடிப்படையில்[20], இழப்பீடுகளுக்கான பல்வேறு எதிர்பார்ப்புக்களை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் கண்டறிந்தது. சில முடிவுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

## மீறல்களின் வகைகள்

தெற்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 25 சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லீம் பெண்களுடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட கற்கையின் முடிவுகளுக்கு அமைய, கற்கையில் நேர்காணப்பட்டவர்கள் கீழ்வரும் மீறல்களை எதிர்கொண்டுள்ளனர்:

1. உள்ளக இடப்பெயர்வு
2. குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்படல் அல்லது காணாமல் போதல்
3. சிறுவர்களின் பலவந்த ஆட்சேர்ப்பு
4. உடல்சார் மற்றும் உளவியல் மாற்றுத்திறன்கள்
5. வாழ்வாதார இழப்பு
6. மிகச்சிறிய வயதில், சிறுவர்கள் குறிப்பாக பெண் சிறுமிகள் திருமணம் செய்து கொடுக்கப்படல்
7. தமது வீடு, காணி மற்றும் சொந்த ஊரை கைவிட்டுச் செல்ல நேரல்
8. தான்தோன்றித்தனமான காணி அபகரிப்புகள்
9. கல்வியை அணுகுவதற்கானத் தடைகள்

## பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களால் எதிர்பார்க்கப்படும் இழப்பீடு

இந்த பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களால் இழப்பீடுகளின் எதிர்பார்ப்புக்களின் மூன்று பிரதான பகுதிகளை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் அடையாளம் கண்டது.

### நிதி இழப்பீடு மற்றும் சேவைகள்:

அவர்களது தற்போதைய சூழ்நிலைகளால், தமது சொந்த மற்றும் அவர்களது குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளை எட்டுவதற்கு நிதி நட்டஈடு மற்றும் சேவைகளுக்கான விருப்பத்தினை பெரும்பாலான பெண்கள் வெளிப்படுத்தினர். வீடு கட்டுவதற்கான உதவி, மருத்துவ மற்றும் உளவியல் சேவைகள், குடும்ப உறுப்பினருக்கான வேலைவாய்ப்பு, அல்லது பிள்ளைகளுக்கான கல்வி போன்ற சேவைகள் பெண்களின் பொதுவான கோரிக்கைகளில் உள்ளடங்கியிருந்தன.

### உண்மை, திருப்தி, அடையாள இழப்பீடுகள் மற்றும் மீளநிகழாமை:

அரசாங்கத்திடமிருந்து தமது அன்புக்குரியவர்கள் சார்ந்த தகவல், திருப்தி, அடையாள இழப்பீடுகள் மற்றும் மீளநிகழாமைக்கான உத்தரவாதம் என்பன தேவை என பெண்கள் தெரிவித்தனர்.

### தனிநபர் மற்றும் கூட்டு இழப்பீடுகள்:

தமக்கு தனிப்பட்ட இழப்பீடா அல்லது கூட்டு இழப்பீடா தேவை என கேட்கப்பட்ட போது, மீறல்களின் அளவு பாரியது என்பதனாலும், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாலும், தனிப்பட்ட மற்றும் கூட்டு இழப்பீடுகள் இரண்டும் வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை பெண்கள் வெளிப்படுத்தினர்.

இந்த எதிர்பார்ப்புக்களை பின்வரும் பிரிவு விளக்குகின்றது:

## நட்டஈடு

- பொருளாதார பார்வையில் கணக்கிடக்கூடிய மீறல்களில் இருந்து ஏற்படக் கூடிய பாதிப்புக்களுக்கு வழங்கப்படும் நிதி வெகுமதிகளை நட்டஈடு குறிக்கின்றது. உதாரணமாக: உடல்சார் மற்றும் உளவியல் தீங்கு
- வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சமூக பயன்கள் உள்ளடங்கலாக இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்
- பொருள்சார் பாதிப்புகள் மற்றும் வருமான இழப்பு, வருமான சாத்திய இழப்பு உள்ளடங்கலாக
- தார்மீக பாதிப்பு
- சட்ட அல்லது நிபுணர் உதவி, மருந்து மற்றும் மருத்துவ சேவைகள், உளவியல் மற்றும் சமூக சேவைகளுடன் சம்பந்தப்பட்ட செலவு.[21]

## புனர்வாழ்வு

புனர்வாழ்வு என்பது,

- பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு தேவையான உடல்சார் மற்றும் உளசார் சுகாதார பராமரிப்பினையும், சட்ட மற்றும் சமூக சேவைகளுக்கான அணுகும் வசதியையும் வழங்கல்.[22]
- தனிநபர், குடும்பம், உள்நாட்டு சமுதாயம் மற்றும் ஒட்டுமொத்தமாக சமூகம் என்ற வகையில் அடையாளப்படுத்துவதன் மூலம் ஆகக் கூடிய உடல்சார் மற்றும் உளம்சார் திறனை அடைதல்[23]

[20] நான் வாழ்ந்த வாழ்க்கை: இலங்கையில் பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு இழப்பீடுகளை நனவாக்குதல், CEJ
[21] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவக் கற்கைகள், CEJ
[22] சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மோசமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டத்தின் மீறல்களின் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் மற்றும் இழப்பீட்டுக்கான உரிமை தொடர்பான அடிப்படை கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டிகள்
[23] டீனா ஷெல்டன், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் நிவாரணங்கள் (ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பதிப்பகம், 2005) (Dinah Shelton, Remedies in International Human Rights Law (Oxford Univ. Press, 2005))

சாரம்சமாக, இழப்பிற்கு ஈடுசெய்வதற்கு அது இலக்கு வைக்கின்றது, அதில் உள்ளடங்குவன:

- மருத்துவ மற்றும்/அல்லது உளச்சமூக ஆதரவுக்கான அணுகும் வசதி
- பிள்ளைகளுக்கு வீடமைப்புத் திட்டங்கள், வேலைவாய்ப்பு போன்ற பொருளாதார உதவி மற்றும் நிதிசார் நட்டஈடு
- மத நடவடிக்ககைளில் ஈடுபடுவதற்கான, பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதற்கான, தமது காணாமல் போன அன்புக்குரியவர் குறித்த தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான சுதந்திரம்
- அரசாங்கத்தினால் மீள நிகழாமை தொடர்பான உத்தரவாதம்[24]

## திருப்தி

திருப்தி என்பது ஒரு பெரிய எண்ணிக்கையிலான சாத்தியமான அடையாள வடிவங்கள் போன்ற இழப்பீடுகளை உள்ளடக்கியது:

- நினைவுகூரல்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள்
- பொது மன்னிப்புகள்
- உண்மை-நாடல்
- குற்றங்களை புரிந்தவர்கள் மீது நீதிசார் மற்றும் நிர்வாகத் தடைகள்
- உண்மைகளை சரிபார்த்தல் மற்றும் காணாமல் போனோரைத் தேடுதல்[25]

## அடையாளம்சார் இழப்பீடுகள்

“கடந்த காலத்தின் வலி மற்றும் வெற்றிகளை நினைப்பதற்கான மற்றும் நினைவுகூருவதற்கான சமுதாயச் செயற்பாட்டினை” மேற்கொள்ளும் முயற்சிகளை அடையாளம்சார் இழப்பீடுகள் குறிக்கின்றது என தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) தெரிவிக்கின்றது.[26] அத்தகைய செயற்பாடுகள் - பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிப்பிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களின் கண்ணியத்தை மீளமைப்பதற்கான பொறியமைப்புகளாக பார்க்கப்படுகின்றன - உண்மைகளைச் சரிபார்த்தல், காணாமல் போனவர்களைத் தேடுதல் மற்றும் நினைவு கூரல்கள், அஞ்சலிகள் மற்றும் பொது மன்னிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியது.[27]

## நினைவுகூரல்

கடந்தகால துஷ்பிரயோகங்கள் மற்றும் மரியாதை தொடர்பில் இணக்கத்திற்கு வருதல், உயிரிழந்த அன்புக்குரியவர்களை அங்கீகரித்தல் மற்றும் நினைவுகூரல் என்பது நினைவுகூரலின் உள்ளார்ந்த அம்சமாகும்.[28] பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களால் பட்டியலிடப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளில் உள்ளடங்குவன:

- மதச் சடங்குகள் மற்றும் நடவடிக்கைகளில் பங்குபற்றல்
- தேசிய நினைவுகூரல் தினத்தை பிரகடனம் செய்தல்
- உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்தில் நினைவுச் சின்னங்கள், நினைவுத் தூபிகளை அமைத்தல்.
- பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களில் பொது இடங்கள் மற்றும் வீதிகளை பெயரிடல்.
- ஏனைய பெண்கள் மற்றும் குடும்பங்களுடன் தகவல்களை பரிமாறல் மற்றும் பகிரல்.
- அரசாங்கத்திடமிருந்து கூட்டாக பதில்களையும், நீதியையும் கோரல்.

[24] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ
[25] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ
[26] தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க குழு, இறுதி அறிக்கை, பதிப்பு 5, அத்தியாயம் 5 - இழப்பீடு மற்றும் புனர்வாழ்வு கொள்கை (Truth and Reconciliation Committee of South Africa, Final Report, volume 5, Chapter 5 on Reparation and Rehabilitation Policy) <https://omalley.nelsonmandela.org/omalley/index.php/site/q/03lv02167/04lv02264/05lv02335/06lv02357/07lv02398/08lv02403.htm>
[27] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ
[28] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ

## மன்னிப்பு

மன்னிப்புகள் என்பது அடையாள இழப்பீட்டின் ஒரு முக்கிய வடிவமாகும். கடந்த காலத்தில் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றதன் முறைசார், மனப்பூர்வமான, மற்றும் பொதுவில் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளும் அங்கீகாரமாகும். அத்தகைய மீறல்கள் தீவிரமான மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெரும்பாலும் ஈடுசெய்ய முடியாத தீங்கினை ஏற்படுத்திய, மேலும், அரசு, குழு, அல்லது தனிப்பட்ட ரீதியில் மன்னிப்பினை கேட்டல் என்பது சில அல்லது இடம்பெற்றதற்கான அனைத்து பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளலாகும்.[29] இழப்பீடுகள் உண்மையில் அர்த்தமுள்ளதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் இருப்பதற்கு இழப்பீடுகளின் ஏனைய வடிவங்களுடன் மன்னிப்பினை சேர்த்தலின் முக்கியத்துவத்தை பெண்கள் சுட்டிக்காட்டினர். தாம் எதிர்கொண்ட தீவிரமான மீறல்களுக்கு மன்னிப்பு மாத்திரம் போதுமானது இல்லை என அவர்கள் சுட்டிக்காட்டினர். சிலர் தனிப்பட்ட மன்னிப்பினை முன்வைத்ததுடன், ஏனையோர் பொது மன்னிப்பினைக் கோரினர்.[30]

## உண்மையை நாடல் மற்றும் நீதி

குறிப்பிட்ட காலப்பகுதியில் மனித உரிமை மீறல்களின் கடந்த கால போக்கினை விசாரிப்பதற்கான பொறியமைப்பு வகையாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இருக்கின்றது. வன்முறை முரண்பாட்டிலிருந்து முரண்பாட்டிற்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிலைமாற்றத்தை அடைவதற்கு அத்தகைய ஆணைக்குழுக்கள் உதவலாம். கடந்த காலத்தின் மீறல்கள் பற்றிய விழிப்புணர்வை இந்த ஆணைக்குழுக்கள் ஏற்படுத்த முடியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பற்றிய உணர்வை வழங்க முடியும். வன்முறைகள் அடையாளப்படுத்தப்படும் மற்றும் எதிர்காலத்தில் இதேபோன்ற துஷ்பிரயோகங்கள் நிகழாது தடுக்கப்படும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு வழங்கும். நீதியை நாடும் அதேவேளை, தாம் பொலிஸில் முறைப்பாடு செய்தோம், பல்வேறு ஆணைக்குழுக்களுக்கு தகவல் வழங்கினோம், கிராம சேவகரை அணுகினோம், மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் காணாமல் போனோர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்தோம் எனத் தெரிவித்த பெரும்பாலான பெண்கள், இதுவரை எந்த நீதியும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டனர்.[31]

## மீளநிகழாமைக்கான உத்தரவாதங்கள்

எதிர்கால மீறல்களைத் தடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தும் மீளநிகழாமைக்கான உத்தரவாதம் என்பது எதிர்வினை அல்லது எதிர்காலத் தீங்கு தொடர்பில் அச்சம் கொள்ளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உத்தரவாதத்தை வழங்குவதற்கு மிகவும் முக்கியமாகும். CEJஇன் கற்கையில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் கோரிய சில உத்தரவாதங்களில் உள்ளடங்குவன:

- மீறல்கள் மீளநிகழ்வதனைத் தடுப்பதற்கான சட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் உருவாக்கல், மற்றும் இந்த சட்டங்கள் வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- மோசமான மனித உரிமை மீறல் வழக்குகளின் தாமதத்தைத் தடுத்தல் மற்றும் விரைவுபடுத்தல்.
- நீதித் துறையின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்தல்.
- சட்டத்தில் வழங்கப்படும் தண்டனைகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- அரசியல் கருத்து மற்றும் கருத்தியலின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்படுவதனை தடுத்தல்.
- பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினை மறுசீரமைத்தல், மற்றும் மீள்கட்டமைத்தல்.
- சட்ட வரைபுநகலின் அடிப்படையில் விழிப்புணர்வை மற்றும் தகவல் அமர்வுகளையும், மக்களுக்கான கொள்கைகளையும் உருவாக்கல்

[29] ICTJ 'சொற்களுக்கு மேலாக: இழப்பீட்டு வடிவமாக மன்னிப்பு' (ICTJ, 2016) (ICTJ, 'More Than Words: Apologies as a Form of Reparation' (ICTJ, 2016)) <https://www.ictj.org/publication/more-than-words-apologies-form-reparation>

[30] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ

[31] இழப்பை நினைவுகூரல்: இலங்கையில் பெண்கள் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான 25 சம்பவ கற்கைகள், CEJ

- கடந்த கால மீறல்கள் தொடர்பில் நேர்த்தியான தகவல்களை உறுதி செய்வதற்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுதல்.

- நாட்டில் குற்றவியல் நீதி முறைமையினை வலுப்படுத்தல்

- கடந்த கால துஷ்பிரயோகங்கள் எதிர்காலத் தலைமுறையினருக்கு கடத்தப்படாதிருப்பதனை உறுதி செய்வதற்கு அவற்றிற்கு இழப்பீடுகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல்

- இனம், மதம் அல்லது மொழியின் அடிப்படையில் பாரபட்சமின்றி அனைத்துப் பிரஜைகளுக்கும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தல்

- சட்டத்தின் முன் சமத்துவத்தினையும், பாரபட்சமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பினையும் உறுதி செய்தல்.

இழப்பீடுகளுக்கான அலுவலக உத்தியோகத்தர்கள், நிலைமாறு கால நீதி தொடர்பில் செயற்படும் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் பால்நிலை மற்றும் இழப்பீடுகளின் முக்கியத்துவம் தொடர்பில் போதியளவு புரிந்துணர்வு இன்மையானது, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும். எனவே, பரந்தளவிலான பாதிக்கப்பட்ட குழுக்களுடன், மிகவும் ஆழமாக கலந்தாய்வுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

## 2020இல் நிலைமாறுகால நீதி உறுதிமொழிகளுக்கான ஆதரவு வழங்கலில் இருந்து அரசாங்கம் பின்வாங்கியமை மற்றும் புதிய சவால்கள்

2019 நவம்பரில் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (UNHRC) தீர்மானம் 30/1இற்கான ஆதரவினை பின்வாங்குவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அறிவித்தார்.[32] தீர்மானத்திற்கு இசைவாக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த பொறியமைப்புக்களின் எதிர்காலம் தொடர்பில் அப்போது கரிசனைகள் எழுந்தன.

மேலும், 2020 ஒக்டோபரில், இலங்கை அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தை புதிய அரசாங்கம் நிறைவேற்றியது.[33] மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பாதுகாப்புக் கவசமாக அல்லது மனித உரிமை மீறல்களின் ஆதாரமாக செயற்படும் அதிகாரம் கொண்ட பிரதான சுயாதீன நிறுவனங்களின் நியமனத்தின் அரசியல்மயமற்ற தன்மையை இந்தத் திருத்தம் நீக்கியது. திருத்தத்தின் கீழ், பாராளுமன்ற குழுவானது தமது பக்கச்சார்பற்ற அவதானிப்புக்களை மாத்திரம் ஜனாதிபதிக்கு வழங்குவதுடன், ஜனாதிபதியினால் நேரடியாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கான நியமனங்கள் செய்யப்படும்.

இழப்பீடுகளுக்கான உறுப்புரிமையில் புதிய நியமனங்கள் முன்வைக்கப்பட்டன.[34] ஆனால், அவை அலுவலகத்தின் உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் பிரதிபலிக்கவில்லை.[35]

[32] https://mfa.gov.lk/43rd-session-hrc/
[33] http://documents.gov.lk/files/act/2020/10/00-2020_E.pdf
[34] https://twitter.com/ParliamentLK/status/1395393686322618377?s=20
[35] https://www.reparations.gov.lk/web/index.php?lang=en

## இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கான பரிந்துரைகள்

- அவசரகாலத்தில் இடைக்கால இழப்பீடுகளை அடையாளங்காணல் மற்றும் வழங்குதல் - குறிப்பாக பெண்களுக்கு
- மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விளக்கப்பட்டவாறு முழுமையான, பரந்தளவிலான இழப்பீடுகளை வழங்கல்
- சட்டத்தினால் வழங்கப்பட்ட ஆணையை இயலுமான வரையில் பரந்தளவில் உரைவிளக்கல்
- பயனாளிகளின்/பாதிக்கப்பட்ட நபர்களின் பாரிய குழுவுக்கு இழப்பீடுகளை வழங்கல்
- தமது அனைத்துச் செயற்பாடுகளிலும் சமத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை கோட்பாட்டின் கீழ் செயற்படல்
- தமது இணையதளத்திலும், ஏனைய வழிகளிலும் இழப்பீடுகள் தொடர்பான கொள்கையைப் பகிரங்கப்படுத்தல்
- இழப்பீடுகளின் கிடைக்கக் கூடிய தன்மை தொடர்பில் பொது வெளிப்பாட்டுத் தன்மையை கொண்டிருத்தல்.
- ஆணையைச் சிறப்பாக முன்னெடுப்பதனை, குறிப்பாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த பெண்களுக்கு சேவை வழங்குவதற்காக தொடர்ச்சியான கலந்தாய்வுகளை முன்னெடுத்தல்
- கலந்தாய்வுப் படையணியின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் வழிகாட்டுதல் வேண்டும்.
- திறன் மேம்பாடு மற்றும் தொழிநுட்ப உதவிக்கான இழப்பீடுகளுக்கான பிரிவில் நிபுணர்களிடம் இருந்து ஆதரவினை பெறல்.

## இலங்கை அரசாங்கத்திற்கான பரிந்துரைகள்

- படிவம் மற்றும் நட்டஈட்டுத் தொகை உள்ளடங்கலாக, இழப்பீடுகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளை அனுமதிக்கும் போது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் தேவைகளினால் அமைச்சரவை வழிநடத்தப்படுவதனை உறுதி செய்தல்.
- இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிக்காக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக போதியளவு வளங்களை ஒதுக்கீடு செய்தல்
- அனைத்துப் பகுதிகளிலும் நினைவுகூரலுக்கான வசதியை உருவாக்கல் உள்ளடங்கலாக இழப்பீட்டு முயற்சிகளுக்கு செயற்றிறன் மிக்க வகையில் ஆதரவளித்தல். சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் இந்த ஆதரவு பரவலாக்கப்படல் வேண்டும்.
- பாதுகாப்புத் துறை திருத்தத்தை செயற்றிறன் மிக்க வகையில் முன்னெடுத்தல்
- போதியளவு ஆதாரம் இருக்கும் போது மனித உரிமை மீறல்கள் சம்பவத்திற்கு சுயாதீன விசாரணகளை முன்னெடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தை அனுமதித்தல்

## சர்வதேச சமூகத்திற்கான பரிந்துரைகள்

- இலங்கையில் இழப்பீட்டுச் செயற்பாடு மற்றும் தேர்ச்சியினை கண்காணித்தல்
- பயனாளிகள்/பாதிக்கப்பட்ட நபர்களாக அனைத்து பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களையும் உள்ளடக்குவதற்கு செயற்றிறன் மிக்கவகையில் ஆதரவளித்தல்
- சட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக நன்கொடைகள், உதவித்தொகைள் அல்லது வெகுமதிகள் ஊடாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிகளுக்கு ஆதரவளித்தல்

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்

325 A 1, திம்பிரிகஸ்யாய வீதி,
கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி/தொலைநகல்: +94 11 2055404

www.cejsrilanka.org | srilanka.cej@gmail.com

/Centre-for-Equality-and-Justice

/CEJ_SriLanka

/cej_srilanka

/channel/CEJ Sri Lanka